Phone No. 4502: Regd: No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 9—12—50 | மணி 8

# நாற்றமடிக்கிறது நம்நாட்டு அமைச்சர் ஆட்சி

## அமைச்சர்களின் ஊழல்கள் அம்பலமாகின்றன

(o)

## குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கத்தக்க சான்றுகள் உள

(:0:)

### தோழர் பிரகாசம் தரும் தகவல்கள்

சென்னை, டிச. 7—

சென்னையில் ஆட்சி புரிந்த முன்னாள் அமைச்சர் சிலர் பற்றியும், இன்றைய அமைச்சர்கள் சிலர் பற்றியும் முன்னாள் முதலமைச்சராயிருந்த தோழர் பிரகாசம் குற்றச் சாட்டுகள் சுமத்தி, சென்னைப் பார்லிமெண்டில் அவற்றை விளக்குகிறார். குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர்கள் அவற்றிற்குப் பதிலிறுத்திருக்கின்றனர்.

ஆனால், ஒருவர் மீதொருவர் குற்றம் சாட்டிக்கொள்ளக் கூடிய நிலையில்தான் இவர்கள் போக்கு இருக்கிறது. இருதரப் பினருடைய வாதங்களையும் பார்க்கும் பொது மக்கள், பொதுவில் காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கேற்றவர்கள் அல்லர் என்றுதான் முடிவு செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

முன்னாள் முதலமைச்சர் பிரகாசம் அவர்கள் சென்னை மந்திரிகள் மீது பல வகையான ஊழல் குற்றங்களைச் சுமத்தியுள்ளார்.

1. உணவுப் பஞ்சம் விரைவாகப் பெருகுவதைத் தடுக்கும் முயற்சியை ஒரு மந்திரி அசட்டைசெய்து தம் சுயநலத்துக்கு வேலை செய்தார்.

2. கிராம அபிவிருத்தி மந்திரி 40,000 ரூபாய் மதிப்புள்ள எருக்களை உழவரேயல்லாத ஒட்டல்காரர் ஒருவருக்கு, தம் நண்பர் என்பதற்காகக் கொடுத்தார்.

3. பஸ் பர்மிட்கள் மந்திரிகள் சிலரின் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டது.

4. பொக்கிஷ மந்திரியின் குடும்பம் சம்பந்தப்பட்ட சுதர்சன் எண்ணெய் ஆலைக்கு 10 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது.

5. ஸ்தல ஸ்தாபனத்தேர்தல்கள் விஷயத்தில் மந்திரிகள் சிலர் நேரடியாகத் தலையிட்டனர்.

6. சென்னை சிம்ஸன் கம்பெனி ஒரு பஸ் ரூ. 23,000 விலையில் கொடுக்க முன்வந்தும் ஒரு பஸ் ரூ. 40,000 விலையில் 25 பஸ்கள் இத்தாலியிலிருந்து வரவழைக்கப்பட்டன. அந்த 25 பஸ்களும் திருப்திகரமானவைகளாயில்லை. மேலும், இயந்திரத்தை அங்கிருந்து வரவழைத்து, மேற்பகுதியை இங்குக் கட்டாமல், முழுவதும் அங்கேயே கட்டியனுப்புமாறு செய்யப்பட்டது.

7. இத்தாலியக் கம்பெனியின் முதல் டெண்டர் காணமற் போய்விட்டது. பல அரசாங்க ரிக்கார்டுகளும் காணப்படவில்லை.

8. இரும்பு-உருக்கு பர்மிட்கள் வழங்கப்பட்ட முறையில் ஊழல் தோழர். கோயங்காவுக்கு மட்டும் 72,000 ரூபாய் மதிப்புடைய பொருள் அளிக்கப்பட்டிருக்கிறது.

9. கோயங்காவின் பொஸாட்டோ ஒட்டல் விஷயத்தில் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் கவனிக்கப்படவில்லை.

10. ரூ. 50,000 வரையில்தான் கைத்தொழில்களுக்குக் கடனுகத் தரலாமென வரவு செலவுக் கணக்கில் ஒதுக்கப்பட்டிருக்க, ரூ. 17,00,000 வரை மந்திரிகள் சம்பந்தப்பட்ட இரண்டு கைத்தொழில்களுக்குக் கடன் தரப்பட்டிருக்கின்றன.

11. நிதிமந்திரியும் அவர் உறவினர் சிலரும் டைரெக்டர்களாயிருக்கும் ஒரு கைத்தொழிலுக்கு ரூ. 10 லட்சம் கடனுகக் கொடுக்கப்பட்டிருக்கிறது நிதிமந்திரியால்.

12. தம் உறவினர்களுக்குப் பெருந்தொகைச் சம்பள உத்தியோகம் கொடுத்தல், சம்பளத்தை உயர்த்தல்.

13. 1928, 1937 அரசாங்கங்களால் உதவி மறுப்பளிக்கப்பட்ட ஆவடி ஆசிரமத் தலைவருக்கு இந்த அரசாங்கம் ரூ. 7700 கிராண்ட் அளித்திருப்பது.

14. ஜெனரல் ஆஸ்பத்திரியிலுள்ள லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ரேடியம் ஊசிகளைப் பெரிய அதிகாரி (மந்திரியின் மைத்துனர்) தம் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சொந்தப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

இவையனைத்தும், தோழர் பிரகாசமும், தோழர் காந்த் என்பவரும் மற்ற மந்திரிகள் மீதும் மற்ற மந்திரிகள் முன்னிருவர் மீதும் சாட்டிய குற்றச்சாட்டுகள் ஆகும். ஆகவே, நம் நாட்டில் ஆளவந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் தங்கள் ஆட்சியில் என்னென்ன திருவிளையாடல்களை நடத்தியிருக்கின்றனர் என்பதற்கு, அவர்கள் ஒருவர் மீது மற்றொருவர் கூறும் குற்றச்சாட்டு

(2-ம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு வாணிகத்தில் இந்தியா 215 கோடி இழந்தது

( 0 )

## சணல் வாணிகத்தில் மட்டும் 48 கோடி ரூ. நஷ்டம்

(o)

### இந்திய அரசாங்கத்தின் அறியாமை

புதுடில்லி, டிச. 6—

இந்திய அரசாங்கம் வெளிநாட்டு வாணிகத்தில் மிகவும் கேவல நிலைமையை அடைந்துவிட்டது. வரவுசெலவுக் கணக்குத் திட்டத்தைச் சென்ற ஆண்டு பார்லிமெண்ட் சபையில், சமர்ப்பித்தபோது, 80 அல்லது 90 கோடிதான் சணல் பொருள் வாணிகத்தில் குறையேற்படுமெனக் கூறப்பட்டது. ஆனால் 215 ரூபாய் குறையேற்பட்டிருப்பதாகச் சில மாதங்களில் வெளியான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று, மேலிடத்தில் அசிரத்தையும் அறியாமையும் சோம்பலும் திறமைக் குறைவும் தாண்டவமாடுவதால், சணல் வாணிகத்தில் மட்டும் இந்தியாவுக்கு 48 கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதனுல் அன்னிய நாட்டார் கொள்ளைலாபமடிக்க வழி ஏற்பட்டது. அரசாங்கத்தாரின் இத்தகைய போக்கு கள்ளமார்க்கெட்டை மேலும் ஆக்கமுறச் செய்வதாகவே இருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் சணல் வாணிகம் பற்றிய திட்டம் மிகக் கேவலமாக இருக்கிறது. அயல்நாட்டு வாணிகத்தை ஒழுங்காக நடத்தத் தெரியாமல், இந்தியா இத்துறையில் பெரும் நஷ்டம் அடைந்து விட்டது.

சணல் வாணிகம் உலகத்திலேயே இந்தியாவின் ஏகபோக உரிமையாயிருக்கத் தக்கது. சணல் நெய்யும் தறிகள் உலகம் முழுவதிலும் 1,50,000 இருக்கின்றன வென்றுல் இந்தியாவில் மட்டும் 67,000 தறிகள் (60 சத விகிதம்) இருக்கின்றன.

ஆனுல் இந்தியாவோ, பெருத்த வருவாயடைய வேண்டிய இந்த இனத்தில் அறியாமையாலும் அசிரத்தையாலும், சோம்பேறித் தனத்தாலும் பெருத்த நஷ்ட மடைந்துவிட்டிருக்கிறதென்றுல், இந்திய அரசாங்கத்தின் வர்த்தகப் போக்கு எவ்வாறிருக்கிறதென்பதை விளக்கவும் வேண்டுமோ. இவ்வொருதுறையிலேயே இவ்வளவு கேவல நிலை என்றுல், மற்றத் துறைகளில் இவர்கள் இன்னும் என்னென்ன குளறுபடிகளைச் செய்து வைத்திருக்கின்றனரோ எவர் அறிவார்! அரசாங்கத்தின் இந்தச்சோம்பேறித்தனத்தின் காரணமாகக் கொழுத்த இலாபமடைந்தவர்கள் அமெரிக்கர்கள்-நம்நாட்டு முதலாளிகள் கூட அல்லர். வெளிநாட்டு முதலாளிகள் இந்தவகையில், 1948-49-வது ஆண்டு சணல் பற்றிய வெளிநாட்டு பொருள் வாணிகத்தில் 80 கோடி ரூபாய் குறைவேற்படும் என்று, 1949-50 வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்த பார்லிமெண்ட் கூட்டத்தின்போது கூறப்பட்டது. ஆனுல் சில மாதங்களுள் வெளியான புள்ளி விவரங்களைக் காணும்போது, 215 கோடி ரூபாய் குறைவேற்பட்டுவிட்டதென்று அறியக் கிடக்கிறது.

டாலர் மதிப்பு மாற்றங் காரணமாக அமெரிக்காவில் சணல் விலை 44 சத விகிதம் உயர்ந்தது. அவ்விலை உயர்வில் இந்திய அரசாங்கம் பெற்றது. 15 சதவிகிதமே. மீதியை அமெரிக்க வர்த்தகர்களே அடைந்தனர்.

இவ்வண்ணம் நேர்ந்துவிட்டதற்குக் காரணம் மேலிடத்துச் சோம்பேறித்தனமும் அறியாமையுமேயாகும் என்று காங்கிரஸ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களே நன்கு எடுத்துக் காட்டுகின்றனர்.

இத்தகைய அறியாமையும்

(4ம் பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 9—12—50 சனிக்கிழமை

# சிரித்திடும் சிறைச்சாலை

மூன்று மாதம், சிறைச்சாலை, இல்லை; மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை. மாவீரர் எழுவர் திராவிடத்தின் சிறப்பெண்ணி மலர்ந்த முகத்துடன் சிறை புகுந்தனர். செய்தி கேட்டோம். திடுக்கிடவில்லை. செங்கோலேந்திகளின் வாழ்விலே மூன்று மாதங்கள் மறுபடியும் குறைந்துவிட்டன என்று கணக்குப் போட்டோம். நாரணமங்கலததில் நமது வீரர்கள்—சுயநல மறியா சூரர்கள்—கொள்கை வெறி கொண்ட தீரர்கள்—எழுவருக்கு, தடையை மீறினார்கள் என்ற காரணத்திற்காக தரப்பட்ட தண்டனை மூன்று மாதக் கடுங்காவல்.

நாரணமங்கலத்தில் 'நவகாளி' நடக்கவில்லை. 'குருக்ஷேத்திரம்' இல்லை. ஆனாலும் வாய்ப்பூட்டுச் சட்டம். தடை யுத்தரவை மீறிய நேரத்திலேகூட தகாத செயலில்லை. அமைதி காத்தனர். அண்ணாவின் கட்டளைக்கு மதிப்பளித்தனர். அவர்கள் கலகக்காரர்களாம. கண்ணுடையோர் கூறமாட்டார்கள் கருத்துடையோர் இப்படி அபாண்டம் சுமத்த மாட்டார்கள். 'அவர்கள் பேசினால் கலக முண்டாகும்.' கிராம முன்சீப் ஆருடங் கூறியிருக்கிறார். யூகத்தை வெளியிட்டிருக்கிறார்; வழக்கு விசாரணையின்போது!

கழகத் தோழர்களின் கூட்டம் கேட்காதவர்—கழகத்தைப் பற்றி எதுவுமே புரிந்துகொள்ளாதவர்—ஆனால் கிராம முன்சீப்—அவர் நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார் கலக்காரர்கள் என்று! அவரே தான் கூறுகிறார் 'கழகத்தைப்பற்றி யானறியேன் பராபரமே' என்று நீதிபதியின் முன்பு! கழக மறியாதவர் கலகக்காரர் என்றார். கழகத்தின் தடை மீறும் திட்டமறியாதவர் 144 என்றார். நீதி, மூன்று மாதம் என்று முழங்கிவிட்டது.

கொடும்புலி வாழும் காடுகளிலேகூட புள்ளி மான்கள் துள்ளிடுவதுண்டு. வேங்கைகள் உலவிடும் இடங்களிலேகூட வெள்ளாடுகள் விளையாடுவதுண்டு. இந்த அதிசய நிகழ்ச்சிகூட நடைபெற இடங்கிடையாது அஹிம்சாவீரர்கள் ஆட்சியிலே! எதிர்க்கட்சிக் கூட்டம் போட இருந்தார்கள், கழகக் கூட்டத்துக்குப் போட்டியாக! அதனால் கலகம் உண்டாகலாம்' சப் இன்ஸ்பெக்டர் கூறியிருக்கிறார் இப்படி.

'எந்தக் கட்சிக்காரர்கள்?' என்று கேள்வி கிளம்பிற்று பதிலில்லை. வந்த பதிலும் தெரியாது என்றே யிருந்தது. 'கூட்டத்தைக் கலைக்க சுட்டுத்தள்ளவும் அதிகாரமிருக்கிறது' என்று நீதிமன்றத்திலேயே ஆத்திரத்தை அள்ளி வீசியிருக்கிறார், அந்த அதிகாரி. அக்கிரகாரத்துவாசி. குன்றத்தூர் நடத்திக்காட்டத்தான் நினைத்திருக்கிறார்—குண்டுகளை தோழர்களின் நெஞ்சில் நுழைக்கத்தான் எண்ணியிருக்கிறார். ஏனோ தெரியவில்லை; ஏமாந்துவிட்டார்.

"சுட்டுத்தள்ளவும் அதிகாரமிருக்கிறது" எங்கேயோ கேட்டிருக்கிறோம் இதுபோல! யார் பேசினது இப்படி! ஆமாம் ஜார் அரசாங்கத்து அதிகாரிகள்! லூயி ஆட்சியின் காவலர்கள்! இட்லரின் ஆட்கள்! இரும்பு நெஞ்சன் முஸோலினியின் பரிவாரங்கள்! ஏன்... வெள்ளை ஏகாதிபத்யங்கூட அப்படித்தான் கூறிற்று.

'ஜாலியன் வாலாபாக்' தியாகிகள் தினம் கொண்டாடப்போகிறார்களாம். டில்லி நகரிலே அதற்குத் திட்டம் தீட்டுகிறார்களாம். தேசீய ஏடுகள் செய்திகள்வெளியிடுகின்றன கொண்டாடப்போகிறவர்கள் யார்? குன்றத்தூரில் எட்டு முறை சுட்டவர்கள். ஆச்சாரியார் பவனியின் போது ஆயிரமாயிரம் திராவிடரை அடித்து நொறுக்கியவர்கள். அவர்கள் 'ஜாலியன் வாலாபாக்' தியாகிகள் தினம் கொண்டாடுகிறார்கள். நாடெங்கும் ஜாலியன்வாலா பாக்குகளை உண்டாக்கிவிட்டு அவர்கள் கொண்டாடுகிறார்கள் 'தியாகிகள் தினம்'! வெட்கம்! வேதனை கலந்த வெட்கம்! சிறைச்சாலை என்ன செய்யும் என்று குயிலான குரலெடுத்துப் பாடியவர்கள் நம்மை சிறைச்சாலைக்கு அழைக்கிறார்கள். இப்போது நாம் கேட்கிறோம்: சிறைச்சாலை என்ன செய்யும்?' சிங்கக் குரலெடுத்து சீறிடும் திராவிடர் கேட்கின்றனர், 'சிறைச்சாலை என்ன செய்யும்?'

காலியாகக் கிடந்த காராக்கிரஹங்கள் காங்கிரஸ் ஆட்சியிலே இட நெருக்கடி பெற்றுவிட்டன. சிறைச்சாலைக்கு நல்ல தீனி-நம்ம சர்க்காரிலே! இன்னும் கொடுக்கப் போகிறார்கள். மூன்று மாத சிறை மட்டுமல்ல! மூன்றாண்டு—முப்பதாண்டு—வாழ்வு முடியும் வரை—தாலமுத்துக்களாகத் தந்தாலும்—நடராசனைத் தின்றது போலத் தின்றாலும்—கவலையில்லாமல் காளைகளை அனுப்ப நாம் காத்திருக்கிறோம். காந்தீய பக்தர்கள் சிறைப் பசியைத் தீர்த்திட முன்வந்துவிட்டார்கள். நாக்கைத் தட்டிக்கொண்டு நிற்கிறது சிறைச்சாலை நல்லுணவு கிடைத்ததென்று! சிரித்திடும் சிறைச்சாலைகள், செங்கோல் பிடித்தவர்களை வாழ்த்தி நிற்கின்றன.

நாமும் வாழ்த்தி அனுப்புகிறோம்; நாராணமங்கலத்துச் சீயங்களே! வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளுங்கள் வெற்றித் தோள்கள்—கொடுமை கிழிக்கப் புறப்பட்ட இடியேறுகள் நீங்கள்—குள்ளநரிக் குணம் படைத்தோர் குடலுறுக்கும் கூட்டத்தார் நீங்கள். மூன்று மாதம் எங்களைப் பிரிந்து போகிறீர்கள். நம்மிடையே மூன்று மாதங்கள் !...உயிராகத் திருப்பித் தந்தால் சந்திக்கிறோம். இல்லையேல் அழகர்சாமியின் கற்றூணுக்குப் பக்கத்தில் உங்களின் நினைவுத் தூண்கள் நாட்டுகிறோம்.

வாழ்க உங்கள் புகழ்!... வணக்கம்.

## கோரியா பிரச்னையில் நம்பிக்கையில்லை !

வாஷிங்டன், டிச. 8—

கொரியா பிரச்னை விஷயமாக சமரசம் ஏற்படலாம் என்ற நம்பிக்கைக்கான அறிகுறி எதையுமே காணோம் என்று சொல்லப்படுகிறது.

ஐ. நா. படைகள் கொரியாவில் இருப்பதை அனுமதிக்கும் எந்த விஷயத்தையும் பற்றி விவாதிக்க பீகிங் தூதகோஷ்டி தயாரககஇல்லை என்று சொல்லப்படுகிறது.

பிரிட்டனும், அமெரிக்காவும் தாங்களாகவே துருப்புகள் வாபஸ் பெற்றுவிடுவதற்கும் தயாராக இல்லை.

இந்தியா பிரதிநிதி தோழர் ராவின் மத்யஸ்தம் கடைசி நிமிஷத்தில் பயன்படுமா என்பது தெரியவில்லை.

அரபுலீக் காரியதரிசிக்கு அஸாம் பாஷா 30 நாட்கள் சண்டையை கொரியாவில் நிறுத்தி வைக்கலாம் என்ற யோசனையை வெளியிட்டிருக்கிறார்.

கொரியாவிலிருந்து ஐ. நா.-ப் படைகள் வெளியேறினால் தான் எது பற்றியும் விவாதிக்க முடியும் என்று ரஷ்யா சூசகமாக தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

## தலைமை வகித்த காளைக்கு தண்டனை

வத்தலக்குண்டு 2-12-50 இவ்வூர் இளைஞர் தி. மு. கழகக் கூட்டத்தில் முத்து தலைமைவகித்து பேசியதற்கு அவ்வூர் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஒருவாரம் சஸ்பெண்டு செய்தாராம். அத்துடன் தி. மு. க. கூட்டத்திற்குச் சென்றாலோ, கழகத்தில் சேர்ந்தாலோ டிஸ்மிஸ் செய்துவிடுவதாக மிரட்டுகிறாராம்.

மிரட்டட்டும். இன்னும் சில காலம் தானே?

## ட்ருமன்-ஆட்லி சம்பாஷணை

வாஷிங்டன், டிச. 8—

பிரஸிடெண்ட் ட்ருமன்-பிரதமர் ஆட்லி இவர்களின் சம்பாஷணைகளில் இரு முக்கிய விஷயங்கள் இன்னும் பேசித் தீர்க்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

அவை 1. சீனாவுடன் சமரசப் பேச்சு நடத்துவதால் கொரியாவைத் தவிர இதர விஷயங்களில் ஏதாவது முடிவுக்கு வர முடியுமா?

2. கௌரவமான சமரசத்திற்கு சீனா இணங்காவிட்டால் என்ன செய்வது?

## நாற்றமடிக்கிறது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்து பொது மக்கள் நன்கு அறிந்துகொள்ளக் கிடக்கிறது.

தோழர் பிரகாசத்தின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க முன்வந்த மந்திரிகள், சொந்தக்காரர்களுக்குப் பர்மிட் கொடுக்கக் கூடாதா என்னும் முறையிலும் பிரகாசம் மட்டும் தவறு செய்யவில்லையா என்னும் முறையிலும் பர்மிட் பெற்றவர்கள் கள்ளச்சந்தை வாணிகம் செய்ததாக மெய்ப்பிக்கப்படவில்லையேயென்றும், பர்மிட் பெற்ற பிறகு அவர்கள் கள்ளச்சந்தையினரானால் மந்திரிகள் என்ன செய்வதென்றும் கேட்கும் முறையில் தான் பதிலளித்திருக்கின்றனர். ஆனால் வாய்ப்பேச்சில் வீரர்களாகிய இவர்கள் தூக்குமேடைக்குப் போவதற்கும் தயாரயிருப்பதாகக் கூறிக்கொள்ளப் பின்வாங்கவில்லை. மந்திரிகள் மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் தாம் மெய்ப்பிக்க முடியும் என்றும் இல்லையெனில் தூக்குமேடை ஏறவும் தயார் என்கிறார் தோழர் பிரகாசம்.

இவ்வகையில் சென்னை மந்திரிசபையின் நிலைமை இருந்துவருகிறது.

பொதுமக்களோ, ஆறு ஆண்டுகளாகத் தீராப்பஞ்சத்தாலும் பிணியாலும் வாடி வதங்கி, தங்கள் உடலுரத்தை இழந்துகொண்டு வருகின்றனர். இதுதான் தேசபக்தர் நடத்தும் ஆட்சிக்கு அடையாளம்.

## ஜார்ஜ்டவுனை வ. உ. சி நகராக்கவும்

தகட்டூர்: 3—12—50ல் வித்துவான் ப. நடேசனார் தலைமையில் 'கப்பலோட்டிய தமிழன்' விழா கொண்டாடப்பட்டது.

அது காலை 'பிரசண்ட விகடன்' துணை ஆசிரியர் அ. இளங்கோவன் பேசியதாவது. 'புதிய தமிழகத்தை காணவேண்டிய அவசியம் பற்றியும், அப்படி அமைக்கப்படுகின்ற புதிய தமிழகமானது சுரண்டல் முறையற்ற சுதந்தர தமிழகமாக விளங்க வேண்டும்' என்றும் பேசினார்.

பிறகு புலவர், காசிநாதன், ஜார்ஜ்டவுனை வ. உ. சி. நகர் என மாற்றியமைக்க வேண்டுமென கூறி முடித்தார்.

கூட்டத்திற்கு இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர் வந்தனர்.

# கழக நடவடிக்கைகள்

திருச்சிராப்பள்ளி:-3-12-50ஞாயிறு காலை 10-30-மணிக்கு திருச்சி மாவட்ட தி. மு. கழக செயற்குழுகூட்டம்திருச்சி என். எஸ். பங்களாவில், தோழர் திரு. ஜி. பராங்குசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. 23-9-50-ல் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற்குழு தீர்மானத்தை இக்கூட்டம் முழுமனதுடன் ஆதரிக்கிறது.

2. மத்திய செயற்குழு தீர்மானப்படி நமது மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட நாடகங்களை நடத்துவது எனவும் அதற்கான வேலைகளை மாவட்ட செயலாளருக்கு அனுமதியளிக்கிறது.

3. சென்னைக்கு சென்ற 24-9-50-ல் மத்திய சர்க்கார் மந்திரி சி. ராஜகோபாலாச்சாரியார் வரும்போது மிக அமைதியான முறையில் வெறுப்பை கருப்புக் கொடி பிடித்து காட்டிய தோழர்களை மிக மிருகத்தனமாக தடியடி பிரயோகம் செய்த சென்னை சர்க்கார் போக்கை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தடியடிக்கு ஆளாகி சிறை சென்ற தோழர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

4. 26-9-50-ல் குன்றத்தூரில் பேச்சுரிமையை நிலை நாட்டுவதற்காக மிக அமைதியான முறையில் 144 தடை யுத்தரவை மீறிய தோழர்களை தடியடி, துப்பாக்கி பிரயோகம் செய்த சென்னை சர்க்காரின் போக்கை இக்கூட்டம் கண்டிப்பதுடன் இதற்கு பொது விசாரணை நடத்த வேண்டுமென்று இக்கூட்டம் கோருகிறது.

மேற்படி ஊரில் அடக்கு முறைக்கு ஆளான தோழர்களை இக் கூட்டம் பாராட்டுகிறது.

5. நமது மாவட்டத்தில் பெரம்பலூர் தாலுக்கா நாரண மங்கலத்தில் 144 தடை யுத்தரவை மீறி சிறை சென்ற தோழர்கள், து. மா. வானமாமலை, செண்பகராசன், விஜயகோபாலன், ஆதிமூலம், வடிவேலு, மருதமுத்து, அமராவதி ஆகிய 7 தோழர்களை இக்கூட்டம் பாராட்டுவதுடன் அது சம்பந்தமாக மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்களை நடத்த மாவட்ட கழக செயலாளருக்கு அனுமதி யளிக்கிறது.

6. 'காந்தியார் சாந்தியடைய' என்ற நூலை எழுதிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கலியபெருமாள், தங்கவேலு ஆகிய தோழர்களை திருச்சி சிறையில் மொட்டையடித்ததை சர்க்கார் இல்லை என்று மறுப்பதை இக்கூட்டம் மிக வருந்துவதுடன் இதற்கு பகிரங்க விசாரணை செய்ய வேண்டுமென்று அரசியலாரை இக் கூட்டம் கோருகிறது.

7. ஜனவரி மாதம் திருச்சிக்கு வர இருக்கும் மத்திய சர்க்கார் மந்திரி சி. ராஜகோபாலாச்சாரியாருக்கு கருப்பு கொடி காட்டுவதென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்த தீர்மானங்களுக்கு பின், கூட்டம் தலைவர் முடிவுரையுடன் பகல் 12-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

* * *

கடம்பூர்:—3-12-50 தி. மு. க. பேச்சு மன்றம் பொதுக் கூட்டம் கழக கட்டிடத்தில் இரவு 8-30-மணிக்கு மு. பேச்சியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. ராமசாமி, மா. க. செல்லையா, எம். எஸ். பி. சாமி ஆகியோர் உணவுப் பஞ்சம் மக்கள் நிலை என்னும் பொருள்பற்றி பேசினார்கள். பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்

நமது தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் மு. குருசாமி அவர்கள் தந்தையார் திரு. மு. முக்கையா அவர்கள் தன்னுடைய 48-வது வயதில் 3-12-50 காலை 9-30-மணிக்கு இயற்கையெய்திவிட்டார் என்ற செய்தி கேட்ட நாங்கள் வருந்துவதுடன் தந்தையை பிரிந்து நிற்கும் தோழர் மு. குருசாமி அவர்களுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறது.

* * *

தூத்துக்குடி: நகர தி. மு. கழக நிர்வாகக் குழு 3-12-50 ஞாயிறு காலை 10-மணிக்கு தி. வயணப்பெருமாள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஆரியமாயை வழக்கின் தீர்ப்பின்படி அபராதம் கட்ட மறுத்து சிறை சென்று திருப்பி விடுதலை செய்யப்பட்டதும் பின் அபராதத் தொகையை வசூல் செய்யும்பொருட்டு தி. மு. கழக பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களுக்கு ஜப்தி வாரண்டு கொடுத்து இருக்கும் இந்த அரசாங்கத்தின் கொடுமையான செயலை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது)

---

## அறிவிப்பு

தோழர் அ. தமிழரசு அவர்கள் உடல்நிலைபாதிக்கப்பட்டிருப்பதால் இன்னும் ஒரு மாதத்திற்கு வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாமல் இருப்பதாக இயக்கத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்.



# 'மாலை மணி' பொங்கல் மலர்

அறிஞர் அண்ணா, தமிழ்ப்பெரியார் திரு. வி. க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன், வியாழன், சிற்றரசு, ஈ. வே. கி. சம்பத், கா. அப்பாதுரை, சோமசுந்தர பாரதியார், அரங்கண்ணல், இராதாமணாளன், மற்றும் பிற அறிஞர்களின் அரிய கட்டுரை, கவிதைகளுடன் வெளிவருகிறது.

## விலை அணா 4 தான்

வெளியூர்த் தோழர்கள் முன்னதாக ஏஜெண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும்.

விளம்பரம் செய்வோர், அலுவலக நிர்வாகிக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளவும்.


## காவலாளிகளுக்கு கட்டளை

சிங்கப்பூர், டிச. 8—

சிங்கப்பூர் கம்பெனிகளில் இரவு நேரத்தில் ஒரு கம்பெனியில் காவல் புரியும் வாச்மென்கள் அநேகமாக எல்லோருமே பகல்நேரத்தில் வேறு கம்பெனிகளில் வாச்மென்களாக வேலை செய்து வருகிறார்கள். ஒரு கம்பெனியில் தான் வேலை பார்க்க வேண்டும் என்ற உத்திரவு இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

---

## இஸ்ரேலின் நிதி நிலைமை

ஹைபா, டிச. 8—

இஸ்ரேலின் நிதி நிலைமை மிக மிக நெருக்கடியாக இருந்து வருகிறது. இஸ்ரேலில் அரசியல் நெருக்கடி நீடிக்கும் வரை பிரிட்டனிடம் கடன் உதவி கேட்டால் கூட கிடைக்காது என்று கூறப்படுகிறது.

---

## அழைப்பு

மாயூரம் கூறை நாடு குயவர் வீதியில் 'வேலாயுதம்மன்றம்' அமைக்க 10-12-50 காலை எல்லோரும் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

# இந்தி பரீட்சையில்-மாணவரின் அதிருப்தி

——:O:——

### முத்தியால்பேட்டை உயர்நிலைப்பள்ளி தன்மான உணர்ச்சி

6-12-50 புதன் மாலை 2-மணிக்கு மேல் பள்ளி மாணவர்களுக்கு இந்தி தேர்வு நடந்தது. அது போது, இந்தி வினாத்தாள்களை வழங்கு முன், மாணவர்கள் ஏகமனதாக ஒன்று சேர்ந்து, வினாத்தாள்கள் எங்களுக்கு அவசியமில்லை யென்றும், தந்தால் விடை எழுத முடியாதெனவும் ஆரவாரம் செய்தார்கள். தலைமை ஆசிரியர் தன் சர்வாதிகாரத்தைக் கொண்டு, வினாத்தாள்களை எல்லா மாணவர்களும் வாங்கித் தீரவேண்டுமென்று வலியுறுத்தி வினாத்தாள்களை வழங்கும்படி ஏற்பாடு செய்தார். மாணவர்கள் வினாத்தாள்களை வாங்கி, அங்குள்ள-மேற் பார்வையாளர்கள் முன் வினாத்தாள்களை கிழித்துப் போட்டுவிட்டு, தங்களுக்கு இந்தி பாஷை தேவையில்லை என்று கூறி விடைத்தாளில் ஒன்றும் எழுதாமல் வெறும் தாள்களைக் கொடுத்துவிட்டு வகுப்பை விட்டு வெளியேறினார்களாம்.

## மூன்றாவது உலக யுத்தத்தை தடுக்க வழி

புது டெல்லி, டிச. 8—

மூன்றாவது உலக யுத்தத்தை தடுக்க வேண்டுமானால் மேற்கு வல்லரசுகள் கௌரவம், அந்தஸ்து இவைகளை ஒதுக்கிவிட்டு உண்மை நிலையை உணர்ந்து ஒப்புக்கொள்ள முன் வரவேண்டும் என்று ஐ. நா. கொரியாக் கமிஷனில் இந்தியப் பிரதிநிதியான தோழர் கொண்டாபி இங்கு கூறினார்.

தோழர் கொண்டாபி சென்ற வாரம் இங்கு வந்து சேர்ந்தார். மற்றொரு கமிஷன் மெம்பரான தோழர் அனுப் சிங்கும் இங்கு எதிர் பார்க்கப்படுகிறார்.

தோழர் கொண்டாபி கூறியதாவது: கொரியா விஷயமாக நேரு அன்று சொன்னது கவனிக்கப்படவில்லை. ஆனால் அவர் சொன்னதை சம்பவங்கள் நிரூபித்துவிட்டன.

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

### 10—12—50

**கோலார் தங்கவயல்**

தோழர்கள் மா. இளஞ்செழியன், என். சி. சபாபதி, விஜயலட்சுமி. டி. கே. சின்னதுரை.

**தூத்துக்குடி**

தோழர் ஈ. வே. கே. சம்பத்.

**திருவாரூர்**

தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி கே. ஆர். செல்லமுத்து.

**மதுராந்தகம்**

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, தில்லை வில்லாளன், திண்டிவனம் தங்கவேலு, சதுரை அழகரசு.

### 11—12—50

**கல்லிடைக்குறிச்சி**

தோழர் ஈ. வே. கி. சம்பத்

### 12—12—50

**திருநெல்வேலி**

தோழர் ஈ. வே. கி. சம்பத்

### 15—12—50

**கண்டவராயன்பட்டி (தேவகோட்டை)**

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

### 16—12—50

**சோக்கனதபுரம் (மானாமதுரை)**

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

### 17—12—50

**திருச்செங்கோடு**

தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

---

## கழகத் தோழர்களுக்கு!

திராவிட முன்னேற்ற கழக நிகழ்ச்சிகளையும், ஆங்காங்கு நடைபெறும் கழக கூட்டங்களின் விவரங்களையும் உடனுக்குடன் "மாலை மணி" அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்

## இனி நடப்பவை

ஆம்பூர்:-10—12—50 ஞாயிறு காலை 10 மணிக்கு நகர தி.மு. கழக கமிட்டிகூட்டம் ஏ. ஜி. சாமி கட்டிடத்தில் நடைபெறும்.

அது சமயம் புது தேர்தல்நடக்க இருப்பதால் அங்கத்தினர்களும், ஆதரவாளர்களும்வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

* * *

திருத்தங்கல்: — தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 10—12—50 ஞாயிறு காலை 10-மணிக்கு நகர் நந்தவனத்தில் நடைபெறும். அவ்வமயம் கழக சம்பந்தமான தீர்மானங்கள் ஆலோசிக்கப்படும்.

* * *

சேலம்:—10—12—50 ஞாயிற்றுக்கிழமை இரவு 7-மணிக்கு அம்மாபேட்டை மெயின் ரோடு, தி. மு. கழக (கிளை) சொற்பயிற்சிக்கூட்டம் தோழர் எம். பி. வள்ளியப்பன் அவர்கள் தலைமையில் "திராவிடர் நிலை" என்னும் பொருள்பற்றி தோழர்கள் டி. என். இராமலிங்கம், எஸ். ஏ. ரஹீம், எஸ். சி. ஆறுமுகம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

காட்டுப்பாடி:— பாரதியார் விழா 9, 10—12—50-ல் வித்துவான் வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பேச்சாளர்கள்: எஸ். தருமாம்பாள், கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி., தி. ஆ. பெ. விஸ்வநாதம், அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் பல தலைப்புகளில் பேசுவார்கள்.

* * *

சென்னை:—புளியந்தோப்பு தி. மு. கழகக் கூட்டம் 10—12—50 நடைபெறும்.

* * *

மயிலை: திராவிட இளைஞர் கழக கட்டிடத்தில் 9-12-50 சனி இரவு 8-30 மணிக்கு தோழர் என். எஸ். நாகரத்தினம் அவர்கள் தலைமையில் மயிலை நடிகர் மன்ற கூட்டம் நடைபெறும். அது சமயம் கட்டிட சீரமைப்பை பற்றி கலந்து ஆலோசிக்கப்படும். ஆகையால் நடிக மன்றத் தோழர்கள் வரவும்.


## ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய நூல்கள்

**விந்திய வீரன்** 1-0-0

(அழகிய மூவர்ண முகப்புடன் கூடிய சிறந்த பதிப்பு)

**ஆண்களை நம்பலாமா?** 0-3-0

**அந்த இரவு** 0-8-0

(மூவர்ண முகப்புடன் கூடிய சிறந்த காதல் சித்திரம் ரா. தணலன் எழுதியது)

**நாசகார சமூகம்** 0-8-0

(அறிஞர் எம் என். ராய். எழுதியதின் தமிழ் மொழிபெயர்ப்பு இருவர்ண ஆர்ட் உரையுடன்)

விற்பனை கழிவு 25% அனுப்பும் செலவு இனம்

தேவைக்கு எழுதுங்கள்

**ஜனக்குரல் காரியாலயம், துறையூர், திருச்சி Dt.,**


## வெளி நாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோம்பேறித்தனமும் நாட்டை ஆட்சி புரிவதென்றால் நாடு முன்னேற்றமடைய முடியுமா? மக்கள் நிலை உயருமா? லஞ்சம், வறுமை, ஏற்படாதிருக்குமா? மக்கள் பட்டினியால் வாடி வதங்கிச் சாகாமலிருப்பார்களா? கொடுமை கொடுமை! அரசாங்கம் நடத்துவதற்குத் தக்கவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து இருக்க வேண்டுமென்பதைப் பொது மக்கள் உணரவேண்டும்; தண்டவாளத்தைப் பெயர்க்கும் தியாகிகளையும் சிறைசென்ற வீரர்களையும் ஜேபோடும் குழுவினரையும் சட்ட சபைகளுக்கும் ஆட்சிப்பீடத்திற்கும் அனுப்பி வைத்துவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள், பாபம். தங்களுக்குத் தெரிந்ததைச் செய்கிறார்கள்; நாட்டிலே பஞ்சமும் பிணியும் தலைவிரித்தாடுகின்றன.


தமிழர் திருநாளன்று வெளிவருகிறது!

## "முன்னேற்ற முரசு"

(வார வெளியீடு)

ஆசிரியர்: பி. ராமசாமி

புரட்சிப்பாதையில் ஏறு நடை, அனல் தெரிக்கும் கருத்தோவியங்கள், சுவை மிளிரும் கதைகள், கற்பனைச் சித்திரங்கள், வீணர் விலா நொறுங்கும் சாட்டையடி! இன்னும் பல.

பொதுவில் தி. மு. கழகத்துக்காக பாடுபடும் தமிழ்ப் பத்திரிகை எல்லா ஊர்களிலும் முன் பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

விவரங்கட்கு: நிர்வாகி, 'முன்னேற்ற முரசு'

81. ஜி. இ. ரோடு, சென்னை—21.


## நாஞ்சில் மாவட்ட முதலாவது மாநாடு

வருகிற நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டிற்கு தொண்டர்படையில் சேர விரும்புவோர் (கழகத் தோழர்கள்) நேரில் நகர திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தில் வந்து தங்களது பெயரை பதிவு செய்துகொள்ளவும். கிளைக் கழகத்திலிருந்து தொண்டர் படையில் சேர விரும்புவோர் கிளைக் கழக செயலாளரிடம் இருந்து தகுதிக் கடிதம் பெற்று மாவட்டக் கழகத்தில் வந்து 10-12-50க்குள் பதிவு செய்துகொள்ளும்படி தொண்டர் படைத் தளபதி தோழர் எம். அந்தோணி கேட்டுக்கொள்ளுகிறார்.

## திருந்திய திருமணம்

10—12—50 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டை, பஜார் தெரு, 8-வது எண்ணுள்ள இல்லத்தில் தோழர் என். வி. நடராஜன் அவர்கள் தலைமையில் தோழர் பெ. தேவராசனுக்கும் தோழியர் மு. செயலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்தினம், கே. கோவிந்தசாமி, பி. எ. மூர்த்தி, ஏ. ஏ. கபாலமூர்த்தி, ரதியா பரசுராமன் முதலியவர்கள் தம்பதிகளை வாழ்த்தி சொற்பொழிவாற்றுவார்கள். இரவு 9-மணிக்கு "இலட்சியவாதி" என்னும் நாடகம் நடைபெறும்.

## கழக பேச்சாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழக பேச்சாளர்கள் தங்களுடைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது "மாலைமணி" அலுவலகத்திற்கு அனுப்பித் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"ஆசிரியர்"

## தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை விவரங்களுக்கு எழுதவும்.

திருச்சி

மாயவரம்

வேலூர்

திருவண்ணாமலை

**"மாலைமணி" பதிப்பகம்**

மண்ணடி சென்னை—1.

## சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

**"மாலைமணி" பதிப்பகம்**

மண்ணடி-சென்னை-1

## பதிவுத் திருமண தம்பதிகள்



"நின்று தடை புரிந்தாய் சமூகமே! நீ நிச்சயம் தோல்வி கொள்வாய்" என்று முழக்கமிட்டு மணமக்களான

ஜி. என். சாமி—ஜேயலட்சுமி.

(மெர்க்கண்டயில் நியூஸ் ஏஜன்ஸி)

பெற்றோர்களின் எதிர்ப்புக்கிடையே இந்த இளம் புறாக்கள் காதல் விழா சண்டனர் 30—11—50-ல் வாழிய காதலர்!


Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-1.